**19.08.2025**
**MCOP.240/2023**
**<u>ம.சா.1. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் பில்டிங் கான்டிராக்ட் வேலை செய்து வருகிறேன். எனது மாத வருமானம் ரூ.30,000/- என எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதை குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பில்டிங் கான்டிராக்ட் வேலையில் அரசு கான்டிராக்ட் வேலையா அல்லது தனியார் கான்டிராக்ட் வேலையா என்றால் தனியார் கான்டிராக்ட் எடுத்து வேலை செய்து வருகிறேன். விபத்து ஏற்பட்ட தேதி தெரியுமா என்றால் 10.05.2017-ல். மேற்படி விபத்து எத்தனை மணிக்கு, எந்த இடத்தில் நடந்தது என்றால் திருத்துறைப்பூண்டி புதிய பேருந்து நிலையம் மேற்கு பக்கத்தில் திருச்சிக்கு செல்லும் பேருந்து நிறுத்தும் இடத்தில் விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் மற்றும் என்ன வாகனம் என்று தெரியுமா என்றால் TN 51 F 2121 TATA INDIGA CAR. நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமான வண்டி என்றால் எனக்கு சொந்தமான வண்டி தான். விபத்து நடந்த சமயத்தில் நான் தலைக்கவசம் அணிந்திருந்தேனா என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு எப்படி சென்றேன் என்றால் விபத்து ஏற்படுத்திய காரின் மூலமாக அங்கிருந்த பொதுமக்களின் உதவியுடன் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். நான்

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என சொன்னார்கள். அதன்படி நான் திருவாரூர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு சென்று மருத்துவரை பார்த்தேன். மருத்துவர் அவர்கள் என்னிடம் சிகிச்சை எடுத்துக்கொள்ள அதிக நாள்கள் ஆகும் என சொன்னதின் பேரில் நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொள்ளாமல் திருத்துறைப்பூண்டியில் உள்ள பெஸ்ட் மெடிக்கல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். காரில் எந்த பகுதியில் உள்ள கதவு திறந்ததால் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் இடது பக்க கதவு திறந்ததால் விபத்து ஏற்பட்டது. போலீசில் புகார் கொடுத்தது நான் தான். முதல் தகவல் அறிக்கையில் காரின் இடதுபக்க முன்கதவை எவ்வித எச்சரிக்கையும் இல்லாமல் ஓட்டுநர் திறந்ததால் விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. என்னுடன் வந்த எனது மகளுக்கு MCOP வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் மகளுக்கு லேசான காயங்கள் ஏற்பட்டதால் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. விபத்து நடந்த இடம் பொதுமக்கள் பயன்படுத்தும் பேருந்து நிலையம் என்றும், அந்த இடத்தில் கார் வேகமாக செல்ல வாய்ப்பு இல்லை என்றும், என்னுடைய கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் இந்த விபத்து ஏற்பட்டது என்று

சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் ம.சா.ஆ.1, 2 ஆகியவற்றில் சொற்ப காயங்கள் என உள்ளது என்றும் நான் இந்த வழக்கிற்காக அதிக நஷ்ட ஈடு தொகை பெற வேண்டும் என்பதற்காக மிகைப்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.10 முதல் 14 வரையிலான ஆவணங்கள் இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்தானது என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டதால் இந்த எதிர்மனுதாரர்கள் எவ்வித நஷ்டஈடு தொகையும் எனக்கு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், இந்த மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**1ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.